வெளிநாட்டு அரசியல் தலைவர்

# ஆசிட் வீச்சில் சேதமடைந்த முகம் பிளாஸ்டிக் சர்ஜரியில் சீரமைப்பு

## மியாட் மருத்துவமனை சாதனை




பிளாஸ்டிக் சர்ஜரிக்கு பிறகு ஜன்சிபார் தீவு தலைவர் முகமது உமர் சையத். அருகில், மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், டாக்டர்கள் எபன் கோஷ், சையத் அலி சையத்

சென்னை, ஜூலை 7: தான்சானியா நாட்டை சேர்ந்த ஜன்சிபார் தீவை சேர்ந்த அரசியல் தலைவர் முகமது உமர் சையத் (59). கடந்த மே மாதம் 22ம் தேதி இவர் மீது நைட்ரிக் ஆசிட் வீசப்பட்டது. இதில், இவரின் வலது பக்க தலை, முகம், கண், மூக்கு, கழுத்து, மார்பு மற்றும் முதுகு பகுதிகளில் தோல்கள் உரிந்து கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும் வலது பக்க காது மற்றும் மூக்கு சேதமடைந்தது. அங்குள்ள மருத்துவமனையில் முதல் கட்ட சிகிச்சை பெற்றார்.

இந்நிலையில், சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் கடந்த மாதம் 22ம் தேதி முகமது உமர் சையத் சேர்க்கப்பட்டார். டாக்டர்கள் பல கட்ட மருத்துவ பரிசோதனைகளை செய்து, அவருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய முடிவு செய்தனர்.

அதன்படி, தலை, முகம் மற்றும் உடல் உறுப்புகள் சீரமைப்பு நிபுணர் டாக்டர் எபன் கோஷ் தலைமையிலான குழுவினர் கடந்த 23ம் தேதி முகமது உமர் சையதுக்கு பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளை சரி செய்தனர்.

இதுதொடர்பாக மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், டாக்டர் எபன் கோஷ் அளித்த பேட்டி: முகமது உமர் சையதின் தொடையில் இருந்து 20 செமீ தோல்களை எடுத்து, பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் பாதிக்கப்பட்ட பகுதியில் வைத்துள்ளோம். மேலும், தோலின் மூலம் அவரது வலது காது மற்றும் மூக்கு வடிவமைக்கப்பட்டது.

இந்த சிகிச்சை 2 மணி நேரம் நடந்தது. அவர் சிகிச்சை முடிந்து 12 நாட்களிலேயே குணமடைந்து விட்டார். 6 மாதத்தில் பூரணமாக குணமடைந்துவிடுவார். முகமது உமர் சையத் தொடையில் தோல்கள் எடுக்கப்பட்டதால், அந்த பகுதி சிவப்பாக மாறியுள்ளது. அந்த இடத்தில் 2 மாதத்தில் புதிய தோல்கள் உருவாகிவிடும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.